# சிறுவர் பாதுகாப்புச் சட்டம்



சட்டத்தரணி மகேஷா டி. சில்வா
இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்புச் சட்டம்

கௌரவ. எஸ்.எஸ். விஜேரத்ன

தலைவர்

இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு

தயாரிப்பு:

சட்டத்தரணி மகேஷா டீ. சில்வா

நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டத்தின் அனுசரணை மற்றும்

இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு

இல: 129 மேல் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி

கொழும்பு – 12.

ROTARACT CLUB OF JAFFN
President

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பதிப்பு 2010

சட்டத்தரணி மகேஷா டீ. சில்வா

சிறுவர் பாதுகாப்புச் சட்டம் / சட்டத்தரணி மகேஷா டீ. சில்வா

வெளியீடு

இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு

இல: 129 மேல் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி

கொழும்பு- 12

தொலைபேசி : +94 11 2433618, +94 11 5335281

+94 11 5335329, +94 11 2395894

தொலைநகல் : +94 11 2433618

மின்னஞ்சல் : legalaid@sltnet.lk

வெப்தளம் :www.lawaid.org

பதிப்பு

பிரின்டெக் எஸ்டப்ளிஷ்மன்ட் தனியார் நிறுவனம்

இல: 41/1 யு. ஈ. பெரேரா மாவத்தை,
ராஜகிரிய

தொலைபேசி : +94 11 2883 884

தொலைநகல் : +94 11 2883 884 Ext.207

மின்னஞ்சல் : printec.lk@gmail.com

ROTARACT CLUB OF JAFFNA
President

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட உதவி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நோக்கி.........

பல்வேறுபட்ட சவால்களுக்கும் அனுபவங்களுக்கும் முகங்கொடுக்கவேண்டிய போட்டித்தன்மை வாய்ந்த சமூகத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நீதியையும், நியாயத்தையும் சமமாக கடைபிடிக்க வேண்டிய சமூகம் ஒன்று அவசியம் என்பதை உணர்ந்துள்ளோம். அவ்வகையில் மனிதாபிமானத்தை மதிக்கும் நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் சட்டப் பாதுகாப்பானது அனைவருக்கும் சமமான வகையில் கிடைக்கப் பெற வேண்டும் என்பதுடன் அது தொடர்பான அறிவுறுத்தல்களும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். இவ்வாறு இடர்களுக்குள்ளாகி எம்மை நோக்கி வரும் நூற்றுக்கணக்கான மக்கள் மத்தியில் காணப்படுகின்ற பிரச்சினைகளாக அடிப்படை உரிமை மீறல், குற்றவியல் குற்றங்களைத் தடுப்பதற்கான செயற்பாடுகள், விவாகம், கட்டுக்காவல், காணி போன்ற உரிமைகள் மறுக்கப்பட்டமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களே எம்மைச் சந்திக்கின்றனர். இதற்கு ஏதுவாக அமைவது யாதெனில் சட்டம் பற்றி அறியாமை மன்னிக்கப்பட முடியாத குற்றமாகும் என்பதுடன் சட்டமானது கற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாடநெறி என்பது பற்றி மக்கள் அறிந்திராமை ஆகும்.

அவ்வகையில் இலங்கையின் மீயுயர் சட்டமாகிய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம், சட்டப் பாதுகாப்பானது அனைவருக்கும் சமமான வகையில் கிடைக்கப் பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிணங்க அனைவருக்கும் சமத்துவத்தை பெற்றுக் கொடுப்பதற்காக மூன்று தசாப்தங்களுக்கு முன் அதாவது 1978ம் ஆண்டின் 27ம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு, இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவானது செயற்பட்டு வருகின்றமையைக் குறிப்பிடலாம். இச்சட்டத்தின் மூலம் இவ்வாணைக்குழுவுக்கு சுயாதீனமாகச் செயற்படுவதற்காகவும் ஒழுங்கமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. அதன் உறுப்பினர்களாக ஒன்பது பேர் காணப்படுவதுடன், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தல் மூலம் மேலும் அறுவர் தெரிவு செய்யப்பட்டு நீதி அமைச்சின் மூலம் மூன்று ஆணையாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாணைக்குழுவின் தலைவர் உட்பட ஏனைய உறுப்பினர்கள் எவ்விதக் கட்டணத்தையும் அறவிடாது தமது பங்களிப்பை நல்குகின்றனர். மேற்கூறப்பட்ட சட்டத்தின் 17வது பிரிவிற்கிணங்க அவசியமான உபதேசங்களைப் பெற்றுக்கொடுப்பது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் மூலம் நிர்வாக சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும். இவ்ஆணைக்குழுவின் மூலம் மக்களுக்கு பல சேவைகள் வழங்கப்படுகின்றன. சட்ட உதவி ஆணைக்குழுவின் பிரதான தலைமைக் காரியாலயம் உட்பட நாடு பூராகவும் தாபிக்கப்பட்டுள்ள அறுபதுக்கும் மேற்பட்ட ஏனைய பிராந்திய நிலையங்கள் எவ்வித வருமானமும் இன்றி செயற்பட்டு வருகின்றமையால், சட்ட உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டியவர்கள் அவற்றை நாடிச் செல்லாம். மேலும் குறிப்பிட்ட ஆணைக்குழுவானது, சேவை நாடுநர் சார்பில் குறித்த பிரதேசங்களின் நீதிமன்றங்களில் சேவை புரியும் சிரேஷ்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகளின் சேவைகளையும் பெற்றுக் கொள்கின்றது. பெரும்பாலான நேரங்களில் சேவை நாடுநர் அறியாமை காரணமாக தவறான வகையில் சட்ட ரீதியற்ற தீர்மானங்களை எடுக்க வாய்ப்புண்டு. இதனைத் தடுப்பதே இச்சேவையின் பிரதான நோக்கமாகும்.

இரண்டாவது அம்சம் யாதெனில் தம்மால் அல்லது சமூகத்தால் ஏற்படும் பிணக்குகள் தொடர்பில் நீதிமன்றத்திற்குச் செல்லாது மத்தியஸ்த முறையில் அதனைத் தீர்ப்பதற்கும், அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சட்டமுரண்பாடுகள் தொடர்பாக எடுக்க வேண்டிய வழிவகைகளை விளக்குவதற்கும், அரச நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மக்களுக்கு அவசியமான விடயங்களில் ஒத்தாசைகளை வழங்குவதும் சட்டஉதவி ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளில் முக்கியமானவைகளாகும். நடைமுறைச் சட்டப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக பெரும்பாலும் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. இவ்வாணைக்குழு மூலம் சட்ட உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்காக அரச நிறுவனங்களின் ஊடாக பாடசாலை மற்றும் கிராமிய மட்டங்களில் பெண்கள், பிள்ளைகள் மற்றும் வயது முதிர்ந்தோர் தொடர்பான சட்ட உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறே மும்மொழிகளிலும் சட்ட அறிவைப் பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதால் அதனை மேம்படுத்துவதற்காக "டேலி நிவுஸ்" பத்திரிகையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கிழமைக்கு ஒரு தடவை "லங்காதீப" பத்திரிகையிலும், ஒவ்வொரு புதன் கிழமையும் தினகரன் பத்திரிகையிலும் சட்ட ஆலோசனைப் பக்கம் வெளியிடப்படுவதன் மூலம் மக்களின் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

மூன்றாவது விடயம் யாதெனில் 8000/= ரூபாவுக்குக் குறைந்த சேவை நாடுநருக்கு சட்டநடவடிக்கைகளின் போது இலவசமாக சட்டத்தரணிகளின் உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது இவ்வாணைக்குழுவின் பிரதான கடமையாகும். குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டோர் தொடர்பாக சட்டத்தரணிகளின் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. பல்வேறுபட்ட பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களில் சேவை புரியும் சட்டத்தரணிகளின் சேவைகளை பெற்றுக்கொள்ளுமிடத்துஅச்சட்டத்தரணிகளுக்குவரையறைகளுக்கு உட்பட்ட வகையில் சட்ட உதவி ஆணைக்குழுவால் கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஆகவே இச்சட்டத்தரணிகள் சேவை நாடுநரிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வது முற்று முழுதாக தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறே எல்லோருக்கும் சட்டப் பாதுகாப்பை பெற்றுக் கொடுப்பதற்காக சட்ட உதவி ஆணைக்குழுவானது விசேடமான சட்டப் பிரிவொன்றைத் தாபித்துள்ளது. இதனூடாக நீங்கள் முகங்கொடுக்கும் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் இலவசமாக சட்ட உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும். இப்பிரிவு தொடர்பாக சட்டத்தரணி ஒருவர் செலாற்றுகின்றார் என்பதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

011-2433618 மற்றும் 011-5335329 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைப்பதினூடாக உங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

விசேடமான சட்ட பிரிவுகள்

- இலஞ்ச மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான பிரிவு
- நீதிபதிகள், சட்டத்தரணிகள், பயிலுனர் சட்டத்தரணிகளின் சிறுவர் உரிமை பிரிவு
- நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான பிரிவு
- வலது குறைந்தோர்களின் உரிமைகள் தொடர்பான பிரிவு
- மனித உரிமைகள் தொடர்பான பிரிவு
- வயது முதிர்ந்தோர் தொடர்பான பிரிவு
- மனித உரிமைகள் பணியகப் பிரிவு
- வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர்களுக்கான சட்டப் பிரிவு
- இடம்பெயர்ந்தோர் தொடர்பான சட்டப் பிரிவு
- பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பிரிவு
- பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள்
- தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் பிணக்குகள் தொடர்பான பிரிவு
- அரச உத்தியோகத்தர்களுக்கு சட்டம் தொடர்பாக விழிப்புணர்வூட்டல் பிரிவு
- சூழலைப் பாதுகாப்பதற்கான பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு நீதியையும் நியாயத்தையும் சமமாக அணுகும் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஒத்தாசைகளைப் பெற்றுக் கொடுக்கின்றது. சட்டம் பற்றி அறியாமை மன்னிக்கப்பட முடியாது எனும் முதுமொழிக்கிணங்க சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஓரளவாவது ஏற்படுத்துவதே இச்சட்ட உதவி ஆணைக்குழுவின் உயர்ந்தபட்ச நோக்கமாகும் என்பதைக் கூறிக்கொள்வதுடன் இது தொடர்பாக அயராது பாடுபடும் இவ்வாணைக்குழுவின் அனைவருக்கும் எனது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீதியையும், நியாயத்தையும் சமமாக அணுகும் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு இச்சட்ட விழிப்புணர்வானது துணைகோலாக அமையும் என்பது எனது கருத்தாகும்.

எஸ்.எஸ். விஜேரத்ன
தவிசாளர்
இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

“இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்” என்ற முதுமொழிக்கிணங்க அவர்களுக்கு சட்டத்தின் மூலம் ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றுக் கொடுப்பதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதே சட்ட உதவி ஆணைக்குழுவின் நோக்கமாகும்.

அதற்கிணங்க சிறுவர் உரிமைகள் சட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, இப்புத்தகத்தை வடிவமைப்பதற்காக இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவின் சிறுவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல் என்பவைகளில் ஈடுபட்டதன் விளைவாகப் பெற்றுக் கொண்ட அனுபவங்களே இச்செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக என்னை ஊக்கப்படுத்திய விடயங்களாகும். இன்றைய சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தைகளில் ஈடுபடுவர்கள் எண்ணிலடங்காத வகையில் காணப்படுவதுடன் அவர்களுக்கு சட்டத்தின் மூலம் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, அவைகளைத் தடுப்பதன் மூலம் சிறுவர்களுக்காக ஒளிமயமான உலகத்தைக் கட்டியெழுப்புவதற்காக வழிகாட்டுவதே எனது நோக்கமாகும்.

அவ்வாறே இப்புத்தகத்தை வடிவமைப்பதற்காக என்னை ஊக்கப்படுத்திய சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் கௌரவ. திரு. எஸ் எஸ் விஜேரத்ன அவர்களுக்கும், இது தொடர்பில் என்னை அடிக்கடி ஞாபகமூட்டிய சட்டத்தரணி களனி மத்தெகொட அவர்களுக்கும், கணனி வடிவமைத்துக் கொடுத்த முகாமைத்துவ உதவியாளர் லக்மினி தர்மதாஸ மற்றும் தமிழில் மொழிபெயர்த்த சட்டமாணி ஸஜீதா வஹாப் அவர்களுக்கும் எனது மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டத்தரணி மகேஷா டீ. சில்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் என்போர்......

உலகின் சகல பிள்ளைகளினது உரிமைகளையும் உள்ளடக்கியவாறான ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்கள் உரிமைகள் பிரகடனமானது சிறுவர் என்பதற்கு குறிப்பான வயது எல்லையையும், மிகவும் தெளிவான வரைவிலக்கணத்தையும் குறிப்பிட்டுள்ளது. அவ்வகையில் 18 வயதிற்குட்பட்ட அனைத்து மனிதப் பிறவிகளும் சிறுவர் என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடங்குவர். எவ்வாறாயினும் எமது நாட்டில் சிறுவர்களை சட்டத்தின் மூலம் வரைவிலக்கணப்படுத்த குறிப்பான வயதெல்லையொன்று கூறப்பட்டுள்ளது.

உதாரணமாக:

- சிறுவர் என்பது 18 வயதுக்குட்பட்டவர் என்று தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 2, 8 என்பன கூறுகின்றன.
- 1841 ம் ஆண்டில் 4ம் இலக்க வீதியோரச் சிறுவர்கள் (தெருச்சுற்றி திரிபவர்கள்) தொடர்பான கட்டளைச் சட்டத்திற்கு இணங்க 18 வயதிற்கு குறைந்த பெண் பிள்ளையைச் சிறுவர் என்று குறிப்பிடுகின்றது.
- 2001ம் ஆண்டு 10ம் இலக்க சர்தேச ரீதியில் பிள்ளைகளை கடத்தி செல்பவர் தொடர்பான குடியியல் விடயங்களுக்கான சமவாயச் சட்டம் சிறுவர் என்போர் 16 வயதிற்குட்பட்டவர்களாவர் என்று கூறுகிறது.

அவ்வாறே சில சட்டங்கள் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையிலான வேறுபாட்டைக் கூறுகின்றது.

உதாரணமாக:

1939ம் ஆண்டின் 48ம் இலக்க சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பான கட்டளைச் சட்டமானது 14 வயதிற்குட்பட்டோரை சிறுவர் என்றும் 14–16 வயதுக்குள் அடங்குவோரை இளம் ஆட்கள் என்றும் அறிமுகப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ம் ஆண்டின் 33ம் இலக்க கனியவளம் மற்றும் சுரங்கச் சட்டத்தின் கீழ் 14-18 வயதுக்குள் உள்ளடங்குவோரை இளம் ஆட்கள் என்றும் 14 வயதுக்குட்பட்டோரை சிறுவர்கள் என்றும் அறிமுகப்படுத்துகின்றது.

## சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவை என்ன?

சிறுவர்கள் உடல் மற்றும் உள ரீதியாக முழுமையான வளர்ச்சியை அடைந்தவர்களல்ல என்பது மருத்துவ விஞ்ஞானத்தின் கருத்தாகும். அவ்வகையில் அவர்களை இலகுவான முறையில் வழிதவறச் செய்ய முடியும் என்பதால் அவர்கள் தொடர்பாக விசேட பாதுகாப்பு மற்றும் விசேட கவனிப்பு வழங்க வேண்டும் என்று சிறுவர் உரிமை பட்டயத்திலும் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திலும் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளன.

## சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் 18வது உறுப்புரை- பெற்றோரின் பொறுப்புடைமை.

சிறுவர்களின் வளர்ச்சி மற்றும் அவர்களது முன்னேற்றம் தொடர்பான அடிப்படைக் கடமையானது பெற்றோர்களுக்கு அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சட்ட ரீதியான பாதுகாவலருக்கு இருப்பதுடன் இச்செயற்பாடு தொடர்பாக அரசாங்கம் அவர்களுக்கு உதவியளிக்க வேண்டும்.

## அரசியலமைப்புச் சட்டம் உறுப்புரை- 12 (4)

அரசியலமைப்பு உறுப்புரையின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தில் 12 (4)ம் உறுப்புரையானது பெண்கள், பிள்ளைகள் அல்லது இயலாமையுள்ள ஆட்கள் தொடர்பாக விசேட சட்டத்தை உருவாக்குவதானது அரசின் பொறுப்புடைமையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

யுனிசெப் அறிக்கையின் படி 2015ம் ஆண்டளவில் வறுமை, பட்டினி , தூயநீர் அறுகிப்போதல் போன்றவைகளால் ஏற்படும் நோய் மற்றும் ஏனைய அழிவுகளின் பிரதிபலனாக 5 வயதிற்கு குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளில் 8.7 மில்லியன் பேர் இறப்பதற்கு சாத்தியம் உண்டு என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அவ்வாறே 2004ம் ஆண்டில் உலகில் காணப்பட்ட மொத்த அகதிகளின் எண்ணிக்கையில் 48 வீதமானவர்கள் சிறுவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 30 வருட காலமாக இடம் பெற்ற யுத்தம் மற்றும் 2004ம் ஆண்டு இடம் பெற்ற சுனாமி பேரலையின் மூலம் பெற்றோரை இழந்த சிறுவர்களும் அங்கவீனமுற்ற சிறுவர்களும் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கும் துர்நடத்தைகளுக்கும் ஆளான சிறுவர்கள் தொடர்பில் கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளதாயினும் முறையான வகையில் கவனத்திற்கு உட்படுத்தப்படாத சிறுவர்கள் பாரியளவில் எமது நாட்டில் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

துஷ்பிரயோகம் :

வேறு தரப்பினரால் சிறுவர்களை சட்டபூர்வமற்ற ஒரு செயலுக்காக ஈடுபடுத்தப்படுதல்.

துர்நடத்தை:

சிறுவனாலேயே செய்யப்படுகின்ற சட்டபூர்வமற்ற செயல்கள்

நடைமுறையில் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தைகள் போன்றவைகளால் சிறுவர்களின் உரிமைகள் வெளிப்படையாகவே மீறப்படுகின்றன.

பிள்ளைகளின் சனத்தொகை குறைந்து செல்லும் நிலைமையானது நடைமுறையைப் போன்றே எதிர்காலத்திலும் அதிகரித்துச் செல்வதற்கான வாய்ப்புண்டு. இது நேரடியான வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினையாகும். நடைமுறை இலங்கையில் சிறுவர்களின் பிறப்பு விகிதம் 1.4 ஆக காணப்படுவதோடு இது நடைமுறையில் உள்ள சனத்தொகையை நிலையான வகையில் பாதுகாப்பதற்கு போதுமானதல்ல என்பதுடன் அவ்வாறு சனத்தொகையை கூடுதலாக அல்லது குறைவாக இல்லாது நிலையான வகையில் பேணுவதற்கு எனின் 2.5 பிறப்பு விகிதம் தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அறிக்கையின் படி 2050ம் ஆண்டளவில் 50 தொடக்கம் 60 வயதிற்கு இடைப்பட்டோரில் முதியோர் சனத்தொகையானது முழுச்சனத்தொகையில் 50 வீதமாகும் என்று வெளியிடப்பட்டுள்ளது. இதன் விளைவு யாதெனில் சிறுவர்களின் சனத்தொகையானது குறைந்து செல்வதுடன் எதிர்காலத்தில் கிடைத்ததற்கரிய செல்வமாக திகழ்வதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன.

நடைமுறையில் உலகமயமாதல் காரணமாக பெரும்பாலும் பிள்ளைகள் தீய செயல்களுக்கு ஆளாகுவதற்கான சாத்தியக் கூறுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறான தீய செயல்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது சட்டத்தின் அடிப்டையான பொறுப்புடமையாகும்.

அது தொடர்பாக சட்டம் பற்றிய விழிப்புணர்வுகளைப் பெற்றுக் கொண்டு நடைமுறையில் உள்ள சட்டங்களை அமுல்படுத்துவதற்கான உதவியை வழங்குவதானது நாட்டு மக்கள் எல்லோரினதும் சட்ட ரீதியான கடமையாகும்.

## சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டத்தின் நிலைமை

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பின் மூலம் 1990ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான பட்டயம் அங்கீகரிக்கப்பட்டதன் காரணம் அதுவரைக்கும் காணப்பட்ட சிறுவர் உரிமை தொடர்பான அனைத்து பிரகடனம் மற்றும் சமவாயங்களில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காகும். 18 வயதை அடைந்த அனைத்துச் சிறுவர்களினதும் உரிமைகளையும் சிறுவர் உரிமைப் பிரகடனமானது உள்வாங்கியதன் காரணமாக, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள மிக முக்கியமான ஆவணமாக அது திகழ்கின்றது. இப்பிரகடனத்தின் மூலம் 4 வகையான வழிகளில் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வாழ்வதற்கான உரிமைகள்.

சிறுவர் உரிமைப் பிரகடனத்தின் மூலம் சிறுவர்களுக்கு வாழ்வதற்கான உரிமையுள்ளது என்பதுடன் அரசினால் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது அரசின் பொறுப்புடைமையாகும். சுகாதார சேவைகள், உணவு, தூய நீரைப் பெற்றுக் கொடுத்தல், வசிப்பிட வசதி உள்ளடங்கலாக குறிப்பிடத்தக்களவு வாழ்க்கைத் தராதரங்களை சிறுவர்களுக்காக பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியதுடன், சிறுவரின் வாழ்க்கை தொடர்பான உரிமைகளை உறுதிப்படுத்துவதும் அரசின் கடமையாகும்.

2. அபிவிருத்தி தொடர்பான உரிமை.

சிறுவர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஓய்வு மற்றும் விநோதமாக இருப்பதற்கும் கலாசாரச் செயற்பாடுகளை அனுஷ்டிப்பதற்கும் உரிமை உண்டு என்பது அபிவிருத்தி தொடர்பான உரிமையில் உள்ளடங்கும்.

3. பாதுகாப்பு தொடர்பான உரிமை.

உலகிலுள்ள பல்வேறு விதமான சிறுவர்களில் அதாவது வலது குறைந்த பிள்ளைகள், அநாதைகள், அகதிகள், வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற சிறுவர்கள் தொடர்பான சகலவிதமான வழிகளிலும் அவர்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் செயல் இடம்பெறுமாயின் அதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை உண்டு.

4. சமூகமளிப்பதற்கான உரிமை

அனைத்துச் சிறுவர்களுக்கும் தமது கருத்தை வெளியிடுவதற்கான சுதந்திரம் உண்டு. மேலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், சிந்தித்தல், மனச்சாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் உண்டு.

சிறுவர்களை ஆயுத முரண்பாட்டில் சேர்த்துக் கொள்வது தொடர்பான மேலதிக பின்னிணைப்பு 2000ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்கப்பட்டு 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி அமுல்படுத்தப்பட்டது.

இலங்கையானது 1991ம்ஆண்டு ஜுலை மாதம் 17ம் திகதி சிறுவர் உரிமைப் பிரகடனத்திற்கு கைச்சாத்திட்டு அதனை ஏற்றுக் கொண்டுள்ளதால் உள்நாட்டுச் சட்ட அமுலாக்கத்தின் போது இப்பிரகடனத்தைப் பின்பற்றுவது அத்தியவசியமானதாகும்.

1995ம் ஆண்டின் 22ம் இலக்க தண்டனைச்சட்ட (திருத்தக்) கோவை உள்ளடங்கலாக ஏனைய பல சட்டங்களையும் திருத்துவதன் மூலம் சிறுவர் சட்டத்தில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தி இதுவரை காலமாக காணப்படாத புதிய கருத்தேற்புக்களை உள்ளடக்கி அரசியலமைப்புச் சட்டம் மூலம் சிறுவர் உரிமைச் சட்டப்பரப்பை மேலும் விரிவுபடுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைப் பிரகடனத்தை எமது நாட்டில் அமுல்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் அமெரிக்கா மற்றும் சோமாலியா தவிர உலகின் அனைத்து நாடுகளும் சிறுவர் உரிமைப் பிரகடனத்தை அமுல்படுத்துவதற்கு உடன்பட்டு கைச்சாத்திட்டுள்ளன. எனினும் பிரகடனத்துக்கு கையொப்பமிடாத நாடுகள் சிறுவர் உரிமைப் பிரகடனத்தை அவமதிக்கும் நாடுகளாக கருதப்பட முடியாது.

## சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான தேசிய சட்டங்கள்

அனைத்து நபர்களும் கட்டுப்பட வேண்டிய அடிப்படையானதும் மீயுயர்ந்ததுமான சட்டம் அரசியலமைப்புச் சட்டமாகும். அதன் 12(4)ம் உறுப்புரைக்கிணங்க சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்பட முடியும்.

அவ்வாறே நியாயமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான சட்ட அமுலாக்கத்தின் போது ஜனாதிபதி, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையை அடிப்படையாகக் கருதி உருவாக்கப்பட்ட அரச வழிகாட்டிக் கோட்பாடுகளின் ஆறாவது அத்தியாயத்தின் 27(13)ம் உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது. பிள்ளைகளினதும் இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்களினதும் உடல், உள, ஒழுக்க, மத, சமூக வளர்ச்சிகளை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலிலிருந்தும், ஓரங்காட்டப்படுவதிலிருந்தும், அவர்களைப் பாதுகாக்கப்பதற்கும் அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்துதல் வேண்டும்.

## சிறுவர் உரிமைகளுக்கு ஏற்ற வகையிலான அடிப்படை உரிமைச் சட்டம்

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் பதினான்கு அடிப்படை உரிமை உறுப்புரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை அத்தியாயத்தின் மூலம் ஆட்சித்துறை அல்லது நிர்வாகத் துறை நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றி உயர்நீதிமன்றத்திற்கு மனுவொன்றை முன்வைப்பதன் மூலம் அந்த அடிப்படை உரிமை மீறப்படுவதை தடுக்கவோ அல்லது அடிப்படை உரிமை மீறப்பட்டதால் ஏற்பட்ட இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளவோ முடியும். அதற்கிணங்க இலங்கையின் மீயுயர் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தையும் மற்றும் சிறுவர் உரிமை பிரகடனத்தில் உள்ள உரிமைகள் தொடர்பாகவும் ஒப்பிட்டு நோக்குவது சிறந்ததாகும்.

பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து உறுப்புரைகளிலும் குறிப்பிடத்தக்கவை மாத்திரமே அடிப்படை உரிமைச் சட்டத்தின் மூலம் சட்டரீதியாக அமுல்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் வேறுபாடு காட்டப்படாதிருக்கும் உரிமையுள்ளது. அவ்வாறான சட்ட உரிமை மீறப்பட்டால் எவ்வாறு தடுப்பது அல்லது மீறப்பட்ட வேளையில் ஏற்பாகும் சட்ட ஏற்பாடுகள் என்ன? என்பன பற்றி பிரகடனத்தில் விபரிக்கப்படவில்லை.

அதாவது சிறுவர் உரிமைப் பிரகடனமானது, ஒழுக்கம்சார்ந்த உடன்பாடொன்றாக மாத்திரம் காணப்படுவது இதற்குக் காரணமாகும். ஆனால் அடிப்படை உரிமைச் சட்டம் அவ்வாறானதல்ல. ஏதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உரிமை ஒன்று மீறப்படும் பட்சத்தில் அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் சிறுவர்கள் உரிமைப் பிரகடனத்தின் பல உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைச் சட்டத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

## ஒப்பீட்டளவில் அடிப்படை உரிமைச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டம்.

| சிறுவர் உரிமைப் பிரகடனத்திற்கிணங்க சிறுவர் உரிமைகள். | இச்சிறுவர் உரிமைப் பிரகடனத்திற்கு ஏற்றவாறான அடிப்படை சட்டத்தில் உள்ள உறுப்புரைகள். |
|---|---|
| 2ம் உறுப்புரை<br>வேறுபாடுகளுக்கும் மாற்றங்களுக்கும் உட்படாதிருத்தல். | 12 (2) உறுப்புரை<br>சமத்துவத்திற்கான உரிமை |
| 12 மற்றும் 13ம் உறுப்புரை<br>கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் | 14 (9) உறுப்புரை<br>மொழியுரிமை மற்றும் சுதந்திரமான வகையில் கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை |
| 14 ம் உறுப்புரை<br>சிந்திக்கும்சுதந்திரம் , மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதசுதந்திரம் | 10ம் உறுப்புரை<br>சிந்திக்கும் சுதந்திரம் , மனச்சாட்சியை பின்பற்றும் சுதந்திரம், மதசுதந்திரம் |
| 15ம் உறுப்புரை<br>ஆட்களுடன் ஒன்று சேரும் சுதந்திரம். | 14ம் உறுப்புரை<br>ஒன்று கூடும் சுதந்திரம் |
| 36 வது உறுப்புரை.<br>வதை இம்சையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான சுதந்திரம் | 11ம் உறுப்புரை<br>சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான சுதந்திரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டார எதிர் விக்கிரமசிங்க 1995 2**SLR** 167 பிள்ளையை கொடூர்த்தன்மை மற்றும் இழிவான நடாத்துகைக்கு உட்படுத்தியுள்ளதால் அரசியலமைப்பு சட்டத்தின் 11வது உறுப்புரையானது மீறப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

கருணாதிலக எதிர் ஜயலத் சில்வா 2003 1**SLR** 35 கல்வியைப் பெறுவது பிள்ளையின் அடிப்படை உரிமையாகும் என்று குறிப்பிடப்படாவிடினும் அவ்வாசகத்தை பொருள்கோடல் செய்யும் போது அதனைப் பெற்றுக் கொள்வது பிள்ளையின் அடிப்படை உரிமை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மொழியுரிமை மற்றும் சிறுவர் உரிமை

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமையாக மொழி உரிமை விளங்குகின்றது. இங்கு தேசியமொழி, நிருவாகமொழி, நீதிமன்றமொழி போன்றவைகளையும் கல்வி கற்பதற்கான மொழி என்பன தொடர்பான சட்டரீதியான நடவடிக்கை முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட 13வது, 16வது திருத்தங்களின் மூலம் மேற்கூறப்பட்ட நடவடிக்கையானது பல தடவைகள் திருத்தத்திற்குள்ளாகியது.

அதற்கிணங்க

சிங்களம், தமிழ் - அரச மொழி

சிங்களம், தமிழ் - தேசிய மொழி

சிங்களம், தமிழ் - நிருவாக மொழி

சிங்களம், தமிழ் - நீதிமன்ற மொழி

சிங்களம், தமிழ் - சட்ட அமுலாக்க மொழி

ஆங்கிலம் - தொடர்பு மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை அல்லது நிருவாகத் துறை நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ள சந்தர்ப்பங்களில் பெறப்பட முடியுமான நிவாரணங்கள் மொழியுரிமை மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ள சந்தர்ப்பங்களுக்கும் ஏற்பானதாகும்.

1) அரசியலமைப்புச் சட்டத்தின் 21(1) ஆம் உறுப்புரைக்கிணங்க

எந்தவொரு சிறுவருக்கும் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வியைக் கற்பதற்கான உரிமையுண்டு.

21(2) ஆம் உறுப்புரைக்கிணங்க

ஏதேனும் பல்கலைக்கழகத்தில் கற்கைநெறி தொடர்பாக கற்பிக்கப்படும் மொழியாக ஒரு தேசிய மொழி இருக்கின்றவிடத்து, அப்பல்கலைக்கழகத்திற்கு சேருவதற்கு முன்னர் மற்றத் தேசிய மொழி மூலம் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர்.

இலங்கையில் சிறுவர் தொடர்பான எல்லா வழக்குகளும் இரு அரச மொழிகளில் தாக்கல் செய்யலாம். அதற்கிணங்க சிறுவர் தொடர்பான வழக்கு அறிக்கை, வழக்கு நடவடிக்கை என்பன இரு அரசமொழிகளின் மூலம் இடம் பெறவேண்டும்.

2) தண்டனைச்சட்டக்கோவை

நடைமுறைச் சமூகத்தில் சிறுவர் எந்தவொரு இடத்திலும் துஷ்பிரயோகங்களுக்கும் துர்நடத்தைகளுக்கும் உட்பட வாய்ப்புண்டு. தொடர்பு சாதனங்கள் மற்றும் கணனியுகத்தின் முன்னேற்றத்தினால் ஏற்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் குற்றங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. அது தொடர்பாக சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக குற்றவியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பொறுப்புடமை பரந்தளவில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1833 ஆம் ஆண்டின் தண்டனைச் சட்டக்கோவையின் மூலம் முதன்முதலாக சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் அசம்பாவிதங்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. தண்டனைச் சட்டக்கோவையை பல தடவைகள் திருத்தத்திற்கு உள்ளாக்குவதன் மூலம் காலத்திற்கேற்றவாறு சட்ட ஏற்பாடுகளை விரிவுபடுத்தப்படவேண்டிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக உபாயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் முக்கியமான திருத்தமாக 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினைக் குறிப்பிடலாம்.

1995 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையில் (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்படும் புதிய குற்றங்களாவன:

- சிறுவர்களை ஆபாசமான வெளியீடுகளில் ஈடுபடுத்தல்.
- சிறுவர்களைக் குரூரமான நடாத்துகைகளுக்கு உட்படுத்தல்.
- சிறுவர்களைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குதல்.
- பாலியல் தொடர்புகளுக்காக கூட்டிக் கொடுத்தல்.
- சிறுவர்களிடமிருந்து முறையற்ற பாலியல் தொடர்பான பிரயோசனம் அடைதல்.
- முறையில்லாப் புணர்ச்சி.
- இளம் பராயத்துப் பெண் பிள்ளைகளுடன் உடலுறவில் ஈடுபடல்.
- சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்கான குற்றங்கள் தொடர்பாக அதிகூடிய மற்றும் அதிகுறைந்த தண்டனை குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பலவிதமான வழிகளில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு 308:-

12 வயதுக்குட்பட்ட பிள்ளையை கைவிட்டுவிடல் அல்லது நிர்க்கதியாக்கல்

12 வயதுக்குட்பட்ட பிள்ளையொன்றின் தந்தை அல்லது தாயாக அல்லது அப்பிள்ளையைக் கவனிப்பதற்கு பொறுப்பாளராய் இருந்து கொண்டு அத்தகைய பிள்ளையை முற்றாக நீங்கும் கருத்துடன் ஏதேனும் இடத்தில் அப்பிள்ளையை விட்டு நீங்கும் அல்லது விட்டுவிடுகின்ற எவரும் ஏழு ஆண்டுகாலங்கள் சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய தவறைப் புரிந்தவராவார்.

பிரிவு 308 அ (1) :-

சிறுவர்களைக் கொடுமைப்படுத்தல் மற்றும் துன்புறுத்தல்

12 வயதுக்குட்பட்ட எவரேனும் ஆளைக் கட்டுக்காப்பில், பொறுப்பில் அல்லது பராமரிப்பில் வைத்திருக்கும் ஒரு நபர் அவ்வாறான பிள்ளையின் உடலுக்கு வேதனைகளை ஏற்படுத்தும், சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும், உளவியல் சீர்குலைவுகளைச் செய்யும் செயல்களைச் செய்தல், சிறுவரைக் கவனியாதுவிடல், அல்லது விட்டுவிடல் போன்றவைகள் ஏற்பட வழிவகை செய்தலானது சிறுவர்களைக் கொடுமைப்படுத்தல் எனும் குற்றவியல் குற்றங்களைப் புரிந்தவராவார்.

அவ்வாறான குற்றத்திற்கு குற்றவாளியாகும் ஒரு நபர் இருவருடங்களுக்கு குறையாததும் 10 வருடங்களுக்கு மேற்படாததுமான இருவகையிலான ஒருவகை மறியற்தண்டனை மற்றும் தண்டப்பணத்திற்கு உட்படுவதுடன் பிள்ளைக்கு ஏற்பட்ட ஊறு தொடர்பாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையை செலுத்துமாறும் கட்டளையிடப்படலாம்.

இங்கு சிறுவரின் கட்டுக்காப்பு, பொறுப்பு, அல்லது பராமரிப்பு என்பவைகளுக்குப் பொறுப்பான நபர்களாக வீடு, பாடசாலை, சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லங்கள் அல்லது சிறுவரின் சட்டரீதியான பாதுகாவலர் போன்றவர்கள் அடங்குவர். மாறாக சிறுவர் வேலை வழங்குனர் ஒருவரால் ஏதாவதொரு வேலையில் ஈடுபடுத்தப்பட்டால் அவ்வேலை வழங்குனரே சிறுவரின் பாதுகாவலர் ஆவார்.

இங்கு ஊறு என்பது உளவியல் அல்லது உளவியல் ரீதியான அதிர்ச்சிகளும் உள்ளடங்கும் என்று 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச்சட்டக் கோவையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவு 358

எவராவது ஒருவரை கடனாளியாக்குவதற்கு அல்லது அடிமைப்படுத்துவதற்கு அல்லது பலாத்காரமாக அல்லது கட்டாயமாக வேலை செய்வதற்கு உட்படுத்தல், அடிமைத்தனத்திற்கு உட்படுத்தல், யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்காக சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ளல்.

அ) எவராவது ஒருவரை கடனாளியாக்குவதற்கு அல்லது அடிமைப்படுத்துவதற்கு அல்லது அவ்வாறு ஆயத்தம் செய்கின்ற

ஆ) எவராவது ஒருவரிடமிருந்து பலாத்காரமான முறையில் அல்லது கட்டாயமாக வேலை வாங்கல் அல்லது அவ்வாறு ஆயத்தம் செய்கின்ற

இ) எவராவது ஒருவரை அடிமைத்தனத்திற்கு உட்படுத்தல் அல்லது அவ்வாறு ஆயத்தம் செய்கின்ற

ஈ) ஆயுத மோதலில் எவராவது சிறுவர் ஒருவரை ஈடுபடுத்தல்அல்லது சேர்த்துக் கொள்கின்ற நபர் இவ்வுறுப்புரையின் கீழ் குற்றவாளியாவார் என்பதுடன், 30 வருடங்களுக்கு மேற்படாத வகையில் இரு வகையில் ஒரு வகை மறியற்தண்டனை அல்லது குற்றப்பணத்துடன் தண்டிக்கப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் சேர்த்தல்

பிரிவு 360(அ)(2) தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்) சட்டம்

இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளுடன் சட்ட விரோதமாக உடலுறவு கொள்வதற்கு 16 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளையின் அல்லது பெண்ணின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி இலங்கையிலிருந்து வெளியேற்றல் அல்லது அதற்கான உடந்தைகளைச் செய்தல்.

எத்தகைய வயதினராகிய ஆளெவரையாவது வேறொரு நாட்டின் விபச்சார விடுதிக்கு விஜயம் செய்வதற்கான முனைப்புடன் இலங்கையிலிருந்து வெளியேற்றல், அல்லது அதற்கான உடந்தைகளைச் செய்தல்.

உடலுறவுச் செயற்பாட்டில் ஈடுபடுவதை நோக்கமாகக்கொண்டு 16 வயதுக்குட்பட்டவரை பாலியல் உறவுக்காக கூட்டிக் கொடுத்தலானது கூட்டம் சேர்த்தல் எனும் தவறுக்கு குற்றவாளியாவதுடன் 10 வருடங்களுக்கு மேற்படாத காலங்கள் மறியற்தண்டனை அல்லது தண்டப்பணத்திற்கும் ஆளாவார்.

பணம் அல்லது வேறு ஏதேனும் கைமாற்றத்திற்காக பிள்ளையை விலைக்கு வாங்குகின்ற அல்லது விற்கின்ற அல்லது எவரேனும் ஆளின் சுவீகாரத்தில் வைக்கப்படுவதை ஊக்குவிக்கும் அல்லது அது தொடர்பாக வசதியளிக்கும், அத்துடன் பலாத்காரமாக அல்லது கட்டாயப்படுத்தி வேலைவாங்கல், அடிமைத்தனத்திற்குள்ளாக்கல், உடலுறுப்புக்களை அப்புறப்படுத்தல், விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தல், அல்லது வேறுவகையில் முறையற்ற பாலியல் பிரயோசனத்தை அடைவதற்காக பணம் அல்லது வேறு ஏதேனும் கைமாற்றத்தினை வழங்கி ஒருவரை விலைக்கு வாங்கல், அல்லது விற்றல், போன்ற காரணங்கள் தொடர்பாக எவரேனும் ஆளின் சுவீகார்த்தில் வைக்கப்படுவதை ஊக்குவிக்கும் அல்லது அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக வசதியளிக்கும் வியாபாரத் தொழிலைச் செய்பவர் "கூட்டம் சேர்த்தல்" குற்றத்திற்கான குற்றவாளியாவார்.

சிறுவர் தொடர்பாக மேற்கூறப்பட்ட குற்றத்தை செய்துள்ளவிடத்து, அந்நபருக்கு மூன்று வருடங்களுக்கு குறையாததும் மற்றும் இருபது வருடங்களுக்கு மேற்படாததுமான காலங்கள் மறியற்தண்டனை மூலமாக தண்டிக்கப்படுவதுடன், தண்டப்பணத்திற்கும் ஆளாக்கப்படுவார்.

அவ்வாறு சிறுவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவது தொடர்பாக

அ) 16 வயதிற்குட்பட்ட அல்லது

ஆ) 16 வயதிற்குட்பட்டவர் என்று நம்புமிடத்து

இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எந்தவொரு முறையிலாவது சுவீகாரத்தில் வைக்கப்படுவதை ஊக்குவிக்கும் அல்லது அதற்காக வசதியளிக்கும் நபர் அது தொடர்பாக குற்றவாளியாவார் என்பதுடன் 10 வருடங்களுக்கு மேற்படாத காலங்கள் இரு வகையிலான ஒரு வகை மறியற்தண்டனை அல்லது குற்றப்பணத்துடன் தண்டிக்கப்படுவதற்கும் அல்லது இரண்டுக்கும் ஆளாவார்.

உ) தண்டனைச்சட்டக் கோவையின் (திருத்தம்) 363(அ) பிரிவு

இத்திருத்தத்தின் மூலம் 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளையுடன் உடலுறவில் ஈடுபடுவதை நியதிச்சட்ட கற்பழிப்பு என்று பொருள்கோடல் செய்யலாம். "12 வயதிற்கு மேற்பட்ட கணவனிடமிருந்து சட்ட ரீதியான வகையில் விவாகரத்துப் பெற்றிராத பெண்ணைத் தவிர, 16 வயதுக்குட்பட்ட பெண்ணாயின் அவளது விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி உடலுறவுச் செயற்பாட்டில் ஈடுபடுவதை நியதிச்சட்ட கற்பழிப்புக் குற்றம்" என்று கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பழிப்பு தொடர்பாக குற்றவாளி ஒருவருக்கு 7 வருடங்களுக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான காலங்கள் கடூழியச் சிறைத்தண்டனை மூலம் மறியற்றதண்டனை வழங்கப்படுவதோடு தண்டப்பணத்துக்கும், நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையை செலுத்துவதற்கும் ஆளாவார்.

எனினும் பின்வரும் விசேட சந்தர்ப்பங்களில் கற்பழிப்பு தொடர்பான தண்டனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

1. அரச அதிகாரி அல்லது அவ்வாறான பதவியை வகிக்கும் வேறொரு நபர் தமது அதிகாரத்தைச் செல்வாக்காகப் பயன்படுத்திக் கொண்டு கற்பழித்தால்
2. ஏதாவது பாதுகாப்பு இல்லத்தில் அல்லது சிறுவர் இல்லத்தின் முகாமைத்துவ நிலையில் பதவியை வகிப்பவர் அல்லது அதன் காரியாலயத்தின் சேவையாளர் தமது அதிகாரத்தைச் செல்வாக்காக பயன்படுத்திக் கொண்டு கற்பழிப்பொன்றைச் செய்தால்
3. வைத்தியசாலையின் முகாமையாளர் அல்லது சேவையாளர் தமது அதிகாரத்தைச் செல்வாக்காக பயன்படுத்திக்கொண்டு ஒரு பெண்ணைக் கற்பழித்தால்
4. 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகளைக் கற்பழித்தால்.
5. உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணைக் கற்பழித்தால்
6. கூட்டமாகச் சேர்ந்து ஒரு பெண்ணைக் கற்பழித்தால்

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்நபருக்கு 10 வருடத்துக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான காலங்கள் கடூழியச் சிறைத்தண்டனையுடன் கூடிய மறியற்தண்டணை வழங்கப்பட வேண்டியதுடன் தண்டப்பணத்துக்கும் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையை செலுத்துவதற்கும் ஆளாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) தண்டனைச்சட்டக் கோவையின் 305(ஆ) பிரிவு

பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்

கற்பழிப்பாக அமையாத செயலொன்றான ஏதேனும் செயலொன்றைப் புரிகின்ற ஆள் ஒவ்வொருவரும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தைப் புரிந்தவராவார். இது ஆண்,பெண் இருபாலாருக்கு எதிராகவும் இடம்பெற முடியுமான குற்றவியல் குற்றமாகும்.

மற்றைய தரப்பினரின் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ பலாத்காரமான முறையில் அச்சுறுத்தல் செய்தல் அல்லது காயமேற்படுத்தல் அல்லது மரணஅச்சுறுத்தல் ஏற்படுத்தியதன் பின்னர் பாலியல் அவாவினைப் பெற்றுக் கொள்வதற்காக அவரது பிறப்புறுப்பை அல்லது மனித உடம்பில் ஏதேனும் பாகத்தை அல்லது வேறேதேனும் சாதனத்தை வேறெதேனும் ஆளின் உடம்பில் ஏதாவது ஒரு பகுதியை பயன்படுத்துதல் முதலியவற்றிற்கு கடூழிய பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெறும்.

இது தொடர்பான தண்டனையாக 7 வருடங்களுக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான கடூழியச் சிறைத்தண்டனையுடன் கூடிய தண்டப்பணம் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட ஊறு தொடர்பாக நட்டஈடும் தீர்மானிக்கப்படும்.

பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகக் குற்றம் 18 வயதுக்குட்பட்டவரால் 16 வயதுக்குட்பட்ட பெண்ணுக்கு எதிராக இடம்பெற்றிருந்தால் நீதிமன்றத்திற்கு 10 வருடங்களுக்கு குறைந்த சிறைத்தண்டனையை வழங்க முடியும். குற்றவாளி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் சிறுமி 16 வயதுக்குட்பட்டவராகவும் காணப்படுமிடத்து பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் மறியற்தண்டனை வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ) முறையற்ற வகையில் பாலியல் துஷ்பிரயோகம்

பிரிவு 360 (அ)

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு, பாலியச் செயற்பாடுகளிற்கு அல்லது பாலியல் ரீதியான ஆபாசமான இழிவான கண்காட்சியில் சிறுவரை பங்குபற்றச் செய்வதற்கு தெரிந்து கொண்டே வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அல்லது பாலியல் உடலுறவின் நோக்கங்களுக்கு அல்லது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு சிறுவர்களை கூட்டி வருதல், அல்லது அச்சுப் பிரதி அல்லது வாய் மொழி மூலம் உடலுறவில் அல்லது துர்நடத்தையில் ஈடுபடுத்துதல், தூண்டுதல் அல்லது சிறுவருடன் தமக்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி எவரேனும் ஆளின் சுவீகாரத்தில் வைத்தல் அல்லது சிறுவனின் பெற்றோருக்கு பணம் அல்லது வேறேதேனும் கைமாற்றத்தைப் பெற்றுக் கொடுப்பதினூடாக சிறுவரைப் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்ளல் மூலம் முறையற்ற வகையில் பாலியல் துஷ்பிரயோகத்தினைப் பெற்றுக்கொள்ளல் போன்ற குற்றங்களிற்கு ஆளாவார்.

இக்குற்றத்திற்கு தண்டனையாக 5 வருடங்களுக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான மறியற்தண்டனையின் அல்லது தண்டப்பணத்தின் மூலம் தண்டிக்கப்படலாம்.

(ஏ) முறையற்ற புணர்ச்சி

பிரிவு 364 (அ)

முழுமையான அல்லது பகுதியளவிலான இரத்த உறவினர்கள் மற்றும் மகவேற்கப்பட்டவர்கள் போன்றவர்களுடன் பாலியல் புணர்ச்சிகளில் ஈடுபடுதலே முறையற்ற புணர்ச்சி எனும் குற்றமாகும். பெற்றோர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள் முழுமையான அல்லது பகுதியளவிலான இரத்த உறவினர் சமூகத்தின் ஒழுக்க விழுமியங்களுக்கு முரணான வகையில் ஊறுகளை ஏற்படுத்தும் முறைகளில் புணர்தல் மூலம் முறையற்ற புணர்ச்சி இடம்பெறுமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குற்றத்தைப் புரிந்தவருக்கு 7 வருடங்களுக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான மறியற்தண்டனையால் தண்டிக்கப்படலாம்.

ஒ) நபர்களுக்கிடையே மிக மோசமான செயற்பாடு

ஒரே பால் அல்லது வேறுபட்ட பாலியல் தொடர்புகளுக்காக சிறுவர்களை ஈடுபடுத்திக் கொள்ளல் குற்றவியல் குற்றமாகும் என்று தண்டனைச்சட்டக் கோவையின் 365 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு 365 (ஆ)

பகிரங்கமாக அல்லது பகிரங்கமற்ற முறையில் அல்லது வேறு ஒரு தரப்பினருடன் மிக மோசமான செயற்பாடொன்று இடம்பெறாதுவிடினும் அச்செயற்பாட்டிற்கு தரப்பினராதல் அல்லது அவ்வாறான ஒரு செயற்பாடு ஒருவரால் மேற்கொள்ளப்படல் போன்ற குற்றங்களிற்கு கூட்டம் சேர்த்தல் அல்லது கூட்டம் சேர்த்தலுக்காக உடந்தையாயிருக்கின்ற எந்தவொரு நபரும் இக்குற்றத்திற்கு குற்றவாளியாவார்.

இவ்வாறு குற்றவாளியான ஒருவர் இருவகையிலான ஒருவகையில் மறியற்தண்டனை அல்லது தண்டப்பணம் செலுத்துவதற்கு அல்லது அவை இரண்டின் மூலமும் தண்டிக்கப்படலாம். இக்குற்றம் 18 வயதுக்கு மேற்பட்டவரால் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு எதிராக இடம்பெற்றுள்ளவிடத்து 10 வருடங்களுக்கு குறையாததும் 20 வயதுக்கு மேற்படாததுமான காலங்கள் கடூழிய சிறைத்தண்டனையுடன் கூடிய மறியற்தண்டனை, தண்டப்பணம் மற்றும் பாதிக்கப்பட்டவர் தொடர்பாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் தொகையைச் செலுத்துவதற்கும் ஆளாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓ) சிறுவர் தொடர்பாக வெளியிடப்படும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சி

பிரிவு 286(அ)

இது 1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் குற்றவியல் குற்றமாகும். இச்சட்டத்தின் திருத்தத்திற்கிணங்க 286(ஆ) பிரிவை சுருக்கமான முறையில் அவதானிக்கலாம். ஏதேனும் ஆபாசமான புத்தகம், ஆவணம், பத்திரம், ஓவியம், சித்திரம், புகைப்படம், படமொன்றில் நடிக்கச் செய்தல் போன்றவைகளுக்கான தோற்ற நிலையை அமைவிப்பதற்கு உருநிலைப்படிவம் கொள்ளுவதற்கென வாடகைக்கு கொடுக்கின்ற, விற்கின்ற அல்லது உடமையில் வைத்திருக்கின்ற பிள்ளையொன்றின் பெற்றோராக, பாதுகாவலராக அல்லது அதனைக் கட்டுக்காப்பில் வைத்திருக்கின்ற ஆளொருவராக இருக்கையில் மேற்கூறப்பட்ட ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் பங்குபற்ற அதற்கு தோற்ற நிலையை அமைவிக்க வழிவகைகள் செய்துகொடுத்தவராயின் அவ்வாறான நபர் அல்லது அவ்வாறான புகைப்படத்தை வெளியிடுகின்ற அல்லது விளம்பரச் செயல்களில் ஈடுபட்டிருக்கும் நபர் மேற்கூறப்பட்ட குற்றத்தை செய்பவராகின்றார்.

அவ்வாறான குற்றத்தை செய்த ஆட்கள் இரண்டாண்டுகளுக்கு குறையாததும் பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமான காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையில் மறியற் தண்டனையால் மற்றும் தண்டப்பணத்தால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்) சட்டத்தின் மூலம் 286 ஆம் பிரிவு 286(ஆ) மற்றும் 286(ஈ) போன்ற இருபிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

286(ஆ) சிறுவருக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக கணனி மூலம் சேவைகளை வழங்கும் ஆளொருவர் அக்குற்றம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். அவ்வாறே ஒருநபர் அக்குற்றத்தை புரிவது தெரியவரின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அதுதொடர்பாக அறிவிக்கவேண்டும். கணனி மூலமாக பாலியல் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பான குற்றத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகிய குற்றம் சாட்டப்பட்டவர் இரு வருடங்களுக்கு விஞ்சாத காலங்கள் இருவகையிலொருவகை மறியற்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

286(இ) சிறுவர் துஷ்பிரயோகம் செய்வதற்காக இடமளிக்கும் அவ்விடத்துக்குப் பொறுப்பாக இருக்கின்ற அல்லது அவ்விடத்துக்குப் பாதுகாப்பை வழங்கும், அதனை நிருவகிக்கும் அல்லது உடமையுடையவருக்கு எதிராக எவரேனும் ஆளுக்கு அறியக்கிடைக்கும் இடத்து அது தொடர்பாக அந்நபர் பொலிஸிற்கு அறிவிக்க வேண்டும். அவ்அறிவித்தலை அவர் அறிவிக்காதுவிடின் அதனைச் செய்யாமைக்கான குற்றத்துக்கு குற்றவாளியாவதுடன் இருவருடங்களுக்கு மேற்படாத காலங்கள் இருவகையிலான ஒரு வகையிலொரு தண்டனைக்கும் குற்றவாளியாவார்.

பிரிவு 288 (1)

பிச்சையெடுப்பதற்கு வழிவகை செய்தல் அல்லது அதற்காக தரகர் வேலை பார்த்தல் கூட்டிக் கொடுத்தல்.

இச்சட்டத்தின் மூலம் பிள்ளைகளை இவ்வாறான சேவைகளில் ஈடுபடுத்துகின்ற தரகர்களைப் போன்றே பெற்றோர்களும் ஒரே வகையான தண்டனைக்கு உட்படுவார்கள்.

பிச்சையெடுத்தல், அல்லது பிச்சை எடுப்பதற்கு தூண்டுதலாகிய கருமங்களுக்காக ஏதாவது ஒரு வீதியில், இடத்தில், அல்லது ஒரிடத்தில் இருப்பதற்கு சிறுவனை ஒழுங்கு செய்யும் அல்லது கூட்டிக்கொடுக்கும் நபர் இது தொடர்பாக குற்றவாளியாவார்.

இவ்வாறான குற்றத்துக்கு குற்றவாளியாகக் காணப்படும் எந்தவொரு நபருக்கும் 5 வருடங்களுக்கு குறையாத காலத்துக்கு இருவிதத்தில் ஒருவிதத்தில் சிறைத்தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்கும் குற்றப்பணம் செலுத்துவதற்கும் உட்படுத்தப்படுபவராவார்.

பிரிவு- 288 (அ) பாலியல் உறவுக்காக சிறுவர்களை கூட்டிக்கொடுத்தல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு- 288 (அ)(1) வரையறை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு சிறுவர்களை கூலிக்கு அமர்த்துதல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல்.

ஏதாவது வரையறை செய்யப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்வதற்கு தெரிந்து கொண்டே சிறுவர் ஒருவரை வாடகைக்கு அமர்த்துதல், சேவையில் ஈடுபடுத்தல் விருப்பத்திற்கு உட்படுத்தல், தூண்டுதல் போன்றவற்றால் அச்சிறுவரைப் பலாத்காரப்படுத்தும் ஒருவர் குற்றவாளியாவார்.

இக்குற்றத்திற்கு 2 வருடத்திற்கு குறையாததும் 5 வருடத்திற்கு விஞ்சாததுமான காலத்துக்கு இருவிதத்தில் ஒருவிதத்திலாவது சிறைத்தண்டனையைப் பெறுவதற்கு உள்ளாக்கப்படுவதுடன் தண்டப்பணம் செலுத்தப்படுவதற்கும் உட்படுத்தப்படுவர்.

மேற்கூறப்பட்ட சகல குற்றங்களும் தண்டனைச் சட்டக் கோவையில் உள்ள குற்றவியல் குற்றங்கள் என்பதுடன் இப்பிரிவின் கீழ் சிறுவர் என்பவர் 18 வயதுக்கு குறைந்த நபர் ஒருவரையும் குறிக்கும்.

இப்போது நாம் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஏனைய சட்ட ஏற்பாடுகளை ஆராய்வோம்.

## 3) 1999 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நீதிமன்ற நடவடிக்கை

16 வயதுக்கு குறைந்த கற்பழிக்கப்பட்ட சிறுமி ஒருத்தியை நீதவான் நீதிமன்றத்தில் சுருக்கமுறையற்ற விசாரணையை நடத்தாது நேரடியாகவே மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர்கள் நீதிமன்றத்தில் இரு தடவை அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதே இவ் ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடபடிக்கைக் கோவை (திருத்தச்) சட்டம்

இச்சட்டத்தின் மூலம் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்வது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை 3 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்திருக்கலாம். இதன் நோக்கம் அத்துஷ்பிரயோகச் செயல் தொடர்பாக எந்தவொரு தாமதம் மற்றும் தடையெதுவும் அற்ற வகையில் விசாரணையை முடிவு செய்து பிள்ளையின் பாதுகாப்பை ஒழுங்குபடுத்துவதாகும்.

5) 1989 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க விபச்சார விடுதிகள் சட்டம்

இக்கட்டளைச்சட்டத்தின் மூலம் விபச்சார விடுதிகளை நடாத்திச் செல்வது குற்றமாகும். இதன் விளைவாக பிள்ளைகளை விபச்சார தொழிலுக்கு ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

6) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள் மற்றும் இளம் ஆட்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கான சட்டம்

இக்கட்டளைச்சட்டத்திற்கிணங்க சிறுவர் என்பது 14 வயதுக்குட்பட்டவராகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு சிறுவர் வேலையாளிக்கு வேலை செய்வதற்கான மணித்தியாலங்கள் மற்றும் ஓய்வு நேரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

1) முற்பகல் 6 மணியிலிருந்து இரவு 8 மணிவரை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் 10 மணித்தியாலங்கள் ஓய்வு வழங்கப்படவேண்டும்.
2) இரவு 8 மணியிலிருந்து 6 மணிவரை வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் 10 மணித்தியாலயங்கள் ஓய்வு வழங்கப்பட வேண்டும்.
3) ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சிறுவர் தொழிலாளிக்கு 7 நாட்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே பிள்ளையைச் சேவையில் ஈடுபடுத்த முடியாத காலங்களாக பின்வரும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

- பாடசாலை நேரத்தில்
- பி.ப 8 மணியிலிருந்து முற்பகல் 8 வரை
- பாடசாலை செல்ல வேண்டிய தினத்தில் 2 மணித்தியாலயத்திற்குமேற்பட்ட மணித்தியாலயங்கள்
- எந்தவொரு ஞாயிற்றுக்கிழமையிலும் 2 மணித்தியாலயங்களுக்கு மேற்பட்ட காலங்கள்
- சிறுவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பாரதூரமான வேலையாயின்
- வாழ்க்கைக்கு, சுகாதாரத்திற்கு, கல்விக்கு அல்லது உடல் ரீதியாக தீங்கு விளைவிக்கும் வேலையில் ஈடுபடுத்தல்.
- சிறுவர்களை வீதிகளில் வியாபாரம் செய்வதற்கு அல்லது ஏனைய தொழில்களுக்கு ஈடுபடுத்தல்

அவ்வாறே சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு பிள்ளைக்கு பாடசாலை செல்வதற்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற தொழில் தொடர்பாக அப்பிள்ளையை வேலையில் ஈடுபடுத்துதல் தடுக்கப்பட்டுள்ளதோடு 12 வயதுக்கு குறைந்த பிள்ளையை வேலையில் ஈடுபடுத்த முடியாது. எனினும் தோட்ட வேலை தொடர்பாக குறைந்த வயதெல்லை 14 ஆகும்.

சட்டத்தில் மேலும் விபரிக்கப்படுவதாவது பிள்ளையை வேலையில் ஈடுபடுத்துவது தடுக்கப்பட்டதாயினும் தமது குடும்பத்தின் வியாபாரத்தில் ஈடுபடுத்துவது மேற்கூறப்பட்ட நிலைமைக்கு விதிவிலக்காகும்.

அவ்வாறே இச்சட்டத்தின் மூலம் 18 வயதுக்கு குறைவான நபர்கள் எனின் பிறந்த தினம், வேலை செய்யும் மணித்தயாலயங்களை உள்ளடக்கிய பதிவு ஒன்றை நடாத்திச் செல்வது வேலை வழங்குநரின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை காரியாலயங்கள் சட்டம்.

இச்சட்டத்தின் மூலம் அரசியலமைப்புச்சட்டத்தின் 12 ஆவது உறுப்புரை ஓரளவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் மூலம் அரசியலமைப்புச்சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கிணங்க பெண்கள் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக விசேடமான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு 14 வயதுக்கு குறைந்தவர்களை கடைகாரியாலயங்களில் வேலைக்கு ஈடுபடுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆண்பிள்ளையாயின் 18 வயதைப் பூர்த்தி செய்யாதவிடத்தும் மற்றும் எந்தவொரு பெண்பிள்ளையை முற்பகல் 6 மணிக்கு முன்பும் மற்றும் பிற்பகல் 6 மணிக்கு பின்பும் கடைகாரியாலயங்களில் வேலையில் ஈடுபடுத்துவது தடுக்கப்பட்டுள்ளது.

8) 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம்.

இச்சட்டமானது பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பில் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளது. 25 வயது வரை தன்னால் தங்களைப் பராமரிக்க முடியாத வயதினையுடைய பிள்ளைகள், வயது எல்லைகளின்றி வலது குறைந்த பிள்ளைகள், 18 வயது வரை ஒவ்வொரு பிள்ளைகளும் அவர்களின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் பராமரிக்கப்பட வேண்டும்.

9) 1944 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வீதியோரச் சிறுவர்களுக்கான கட்டளைச்சட்டம்.

சிறுமி ஒருவர் அவளது பெற்றோர் அல்லது பாதுகாவலரால் தெரிந்து கொண்டே விபச்சார வாழ்க்கையை நடாத்தப்பட்டால் அல்லது அவர்களால் ஏமாற்றப்பட்டு அல்லது பாலியல் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டால் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அக்குற்றத்திற்கு குற்றவாளியாவார். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் தொடர்பான முறைப்பாடொன்றை கிராமசேவகருக்கு, நீதவான் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யலாம்.

10) 1945 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம்

இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் பின்வரும் நிலைமைகளின் கீழ் வேலைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு கிழமைக்கு 48 மணித்தியாலயங்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். வேலை மணித்தியாலயங்கள் ஒரு நாளைக்கு 12 மணித்தியாலயங்களுக்கு மேற்படக்கூடாது. முற்பகல் 6 மணிக்கு முன்பாக ஆரம்பிக்கக்கூடாது என்பதுடன் பிற்பகல் 6 மணிக்கு பின்பும் ஈடுபடுத்தப்படவும் கூடாது.

எனினும் 16 வயதினைப் பூர்த்தி செய்யாத இளம் ஆட்கள் நான்கரை மணித்தியாலயங்களுக்கு மேற்பட்டவாறு தொடர்ந்து வேலை செய்தால் குறைந்தபட்சம் அரைமணித்தியாலங்களேனும் ஓய்வு எடுப்பதற்காக அல்லது உணவு உண்பதற்காக வழங்கப்பட வேண்டும். மாறாக ஓய்வு நேரத்தை வழங்காது தொடர்ந்து வேலையில் ஈடுபடுத்தக்கூடாது.

வழமைக்கு மாறாக விதிக்கப்பட்ட நேரத்துக்கு மேலதிகமாக சேவையில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் குறிப்பிட்ட மேலதிகச் சேவைப் பெறுவனவைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு சிறுவர் எனப்படுவோர் 14 வயதுக்கு குறைந்த ஆள் என்பதுடன் இளம் ஆட்கள் எனப்படுவோர் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் குறைந்த ஆட்கள் என்றும் கருதப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11) 1995 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் வீட்டு வன்முறைச் சட்டம்

வீட்டு வன்முறைகள் ஏற்படும் இடங்களாக குடும்பம் அல்லது வீட்டுச்சூழல் என்று இச்சட்டத்தினால் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு இடத்திலும் வன்முறைகளுக்கு உள்ளாகும் ஒவ்வொரு ஆட்களுக்கும் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

சட்டத்தின் 2(2) உபபிரிவிற்கிணங்க பாதிக்கப்பட்ட நபர் சிறுவராயின் அச்சிறுவருக்காக

- அவனின் பெற்றோரில் ஒருவரால் அல்லது அச்சிறுவரின் பாதுகாவலரால்

- பிள்ளை வசிக்கும் இடத்தில் வசிக்கின்ற ஆளொருவரால்

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபைச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட தேசிய அதிகாரசபையின் மூலம் எழுத்து மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட நபரால் குறிப்பிட்ட நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்ய வேண்டும். இதன் விசேடத்துவம் யாதெனில் வன்முறைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்று நியாயமாக கருதப்படும் வேளையிலும் நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்ய முடியும்.

## 12) சிறுவர் மற்றும் இளம்பராயத்தவர் தொடர்பான கட்டளைச் சட்டம்

சிறுவர் மற்றும் இளம் பராயத்தவர்களால் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான சட்டங்கள் இச்சட்டத்தில் ஆறு பகுதிகளைக் கொண்டு விபரிக்கப்பட்டுள்ளன. எனினும் தற்போது இச்சட்டத்தின் 1,2,3,6 போன்ற பகுதிகள் மாத்திரமே அமுலில் இருக்கின்றன. மேலும் ஐந்தாவது பகுதியின் 6,7 வது பிரிவுகளும் அமுலில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பகுதி: சிறுவர் நீதிமன்றங்களை நிறுவுதல் மற்றும் அதன் தொழிற்பாடுகளும் கடமைகளும்

இச்சட்டத்தின் கீழ் பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்கள் என்றும் 14-16 வயதினை உடையவர்களை இளம்பராயத்தவர் என்றும் அறிமுகப்படுத்துகிறது. சிறுவர் மற்றும் இளம்பராயத்தவருக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும போது அவர்களின் அதி உயர்ந்தபட்ச நலன் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது இதன் அடிப்படை நோக்கமாகும்.

இரண்டாவது பகுதி: இங்கு சிறுவர் மற்றும் இளம்பராயத்தவர்களால் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் போது நீதிமன்றத்திற்கு ஏற்பாகும் விசேட நடவடிக்கைகள் விபரிக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது பகுதி: குற்றவாளியாகின்ற சிறுவர் மற்றும் இளம்பராயத்தவர்களின் பாதுகாப்பு தொடர்பான தங்கும் இல்லங்கள், அனுமதி பெற்ற பாடசாலைகள் மற்றும் சான்றிதழ் பெற்ற பாடசாலைகள் தொடர்பான நடவடிக்கைகள்

இதன் கீழ் தங்கும் இல்லங்கள், அனுமதிபெற்ற பாடசாலை, அநாதை இல்லங்கள், மற்றும் சிறுவர் இல்லங்களை தாபிப்பது தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளது.

2006ம் ஆண்டின் 27ம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை சட்டம்

பிரிவு- 31

21 வயதிற்குட்பட்ட ஆட்கள் தொடர்பாக புகையிலை மற்றும் மதுசாரம் போன்றவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் மற்றும் விநியோகிப்பதற்காக முன்வருதல் என்பவைகளைச் செய்யக் கூடாது.

5வது பகுதியில் 76 வது பிரிவின் மூலம் 16 வயதிற்குட்பட்ட சிறுவருக்கு புகையிலை மற்றும் அப்புகையிலை பயன்படுத்தப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய உற்பத்திகள் மற்றும் சிகரெட் போன்றவைகளை விற்பனை செய்வது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும்.

2007 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சமவாயச் சட்டம்.

இச்சட்டத்தின் 5வது பிரிவின் மூலம் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

(அ). சகல சிறுவர்களுக்கும் அவனது அல்லது அவளது பிறப்பைப் பதிவு செய்வதற்கும், பிறப்பிலிருந்து பெயர் ஒன்றைக் கொண்டிருப்பதற்கும் உரித்துடையவர்..

ஆ) தேசியத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிமையுண்டு.

இ) சிறுவர்களுக்கு எதிரான குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் சட்ட உதவியற்றதன் காரணமாக அநீதி இடம்பெற முடியுமான சந்தர்ப்பங்களில் அதனைக் கருத்திற் கொண்டு அரச செலவில் அரசால் வழங்கப்படும் சட்ட உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமையுண்டு.

4(2) ஆம் உறுப்புரை

சிறுவர்களுடன் தொடர்பான விடயங்கள் அரச அல்லது தனியார் துறை செயற்படுகின்ற சமூக நலன்புரி நிறுவனங்கள், நீதிமன்றங்கள், நிர்வாக அலுவலர்கள் அல்லது அரசியலமைப்புச் சபை போன்றவைகளால் பொறுப்பேற்கும் போது அவ்வனைத்து விடயங்களிலும் சிறுவர்களின் அதியுயர்ந்த நலனுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

## சிறுவர்கள் தொடர்பான சட்டங்களில் உள்ள விசேட ஏற்பாடுகள்

1) தண்டனைச் சட்டக் கோவையின் 53 ஆவது பிரிவுக்கு ஏற்றவாறு 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படக் கூடாது.
2) தண்டனைச்சட்டக் கோவையின் 75 ஆவது பிரிவில் குறிப்பிடப்படுவது 08 வயதுக்கு குறைந்த பிள்ளையயொன்றினால் செய்யப்படும் எதுவும் குற்றமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) தண்டனைச் சட்டக்கோவையின் 76 ஆவது பிரிவு மூலம் 8 வயதுக்கு மேற்பட்டதும் 12 வயதுக்குட்டதுமான- சிறுவர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தனது நடத்தையின் தன்மையையும், விளைவினையும் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு போதிய முதிர்ச்சியடையாததுமான சிறுவரொருவனால் செய்யப்படும் எதுவும் தவறொன்றாகாது.

4) பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பான சட்டத்தின் மூலம் சிறுவர்களின் வழக்கு நடவடிக்கைகளுக்காக வேறான நீதிமன்றம் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5) பராயமடையாதவரால் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தமானது குறிப்பிட்ட பருவ வயதை அடைந்த பின்னர் அதனை மீண்டும் ஏற்றுக்கொண்டதன் பின்னரே செல்லுபடியாகும்.

6) சகல பிள்ளைகளும் 14 வயதுவரை கட்டாயமாக கல்வியைப் பெற வேண்டும்.

7) சிறுவர்களின் சொத்து தொடர்பில் அப்பிள்ளை 18 வயதை அடையும் வரை சிறுவருக்கு எதிராக ஆட்சியுரிமை செல்லுபடியாகாது.

8) பிள்ளையின் வழக்கு நடவடிக்கையானது திறந்த நீதிமன்றத்தினுள் இடம்பெற வேண்டும்.

9) பிள்ளை எப்பொழுதும் வயது முதிர்ந்த சிறைக்கைதிகளுடன் தடுத்து வைப்பதற்கு கட்டளை இடப்படக் கூடாது என்பதுடன் அவர்கள் வெவ்வேறாக தடுத்து வைக்கப்படவும் வேண்டும்.

10) சிறுபராயத்த குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனையை வழங்குவதே இறுதியான தண்டனையாக பிரயோகித்தல் வேண்டும்.

பிள்ளையின் அதியுயர்ந்த நலன்

3 ஆவது உறுப்புரை- சிறுவர் உரிமைப் பிரகடனம்.

"சிறுவர்கள் தொடர்பான கருமங்களில் தீர்மானங்களை எடுக்கும் சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் அதியுயர்ந்த நலன் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்". சிறுவர்கள் தொடர்பான நேரடியான அல்லது மறைமுகமாக ஏற்படும் எல்லாவிதமான செயற்பாடுகளிலும் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதியுயர் நலன் கவனத்தில் கொள்ளப்பட்ட வகையில் தீர்மானங்களை எடுப்பது அனைத்து நபர்களினதும் கடமையாகும்.

## அதியுயர்ந்த நலனை சட்டக் கருத்தேற்பாக நோக்குமிடத்து

பிள்ளையின் பாதுகாவல், பொறுப்பு, பராமரிப்பு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் பிள்ளையின் அதியுயர்ந்த நலன் எனும் சட்ட ஏற்பாடு கருத்தில் எடுக்கப்படும். பிள்ளையின் அதியுயர்ந்த பாதுகாவலை வழங்கும் மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் பாதுகாவல், பராமரிப்பு தொடர்பாக கூடுதலான வகையில் கருத்தில் கொள்ளப்படும். இந்நீதிமன்றத்தின் மூலம் பிள்ளையின் அதியுயர்ந்த நலன் அதிகூடுதலான வகையில் அமுலாக்கப்படும். அவ்வாறே சிறுவர் குற்றவாளிகள் தொடர்பாக குற்றவியல் செயற்பாடுகளில் சிறுவரின் அதியுயர் நலன் தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு உட்படுத்த வேண்டும்.

## பிள்ளையின் மேலான அதியுயர்ந்த நலன்.

பிள்ளையின் உடல் அல்லது உளரீதியான அபிவிருத்தியின் பொருட்டு பயனளிக்கக் கூடிய உபாயங்களைப் பின்பற்றி சிறுவர்களுக்கான எனும் சூழலை வழங்குவதற்கு இயலுமாயினும் இது நீதிமன்றத்தின் மூலம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தீர்மானம் எடுப்பதிலேயே தங்கியுள்ளது.

## பிள்ளையின் மேலான அதியுயர்ந்த நலன் தொடர்பான நடைமுறை நிலைமை

எந்தவொரு பிள்ளைக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் உள்ள சகல உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியுமாயின் அவ்வேளையில் பிள்ளையின் மேலான நலன் கருத்திற் கொள்ளப்படும் என்று அனுமானிக்கலாம். எனினும் நடைமுறையில் அந்நிலைமைக்கு மாறான சமூகம் மற்றும் பொருளாதார சூழலில் அமுலில் உள்ள சான்றுகள் நீதிமன்றத்தின் மூலம் கருத்தில் எடுக்கப்பட்டு நிகழ்வாய் அமைந்த காரணிகள் மீது பிள்ளையின் அதியுயர் நலன் கருத்தில் கொள்ளப்பட்ட வகையில் கட்டளையொன்று வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிலையங்கள்

சிறுவர் உரிமைகளை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட முதலாவது நாடாக இலங்கையை அறிமுகப்படுத்தலாம். அதற்குக் காரணம் சிறுவர் உரிமைகளை விருத்தி செய்வதற்காக முதன் முதலாக 1928ம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு சமூகம் எனும் அமைப்பு தாபிக்கபட்டதைக் கூறலாம். சமூகத்தில் கௌரவிக்கப்பட வேண்டிய நபர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இதுவரைக்கும் சிறுவர் உரிமைச் சட்டப் பரப்பை விருத்தி செய்து பாரியளவிலான சேவைகளைச் செய்துள்ளது. சிறுவர் நீதிமன்றங்களை உருவாக்குவது இதன் பிரதான குறிக்கோள் என்பதுடன் அண்மைக்காலங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை உருவாக்குவதிலும் முன்னோடியாக இருந்த நிறுவனமாகும்.

துஷ்பிரயோகம் :

வேறு தரப்பினரால் சிறுவர்களை சட்டபூர்வமற்ற ஒரு செயலுக்காக ஈடுபடுத்தப்படுதல்.

துர்நடத்தை:

சிறுவனாலேயே செய்யப்படுகின்ற சட்டபூர்வமற்ற செயல்கள்

## மேற்கூறப்பட்ட துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தையைத் தடுப்பதற்கான நிலையங்கள்

### இலங்கைப் பொலிஸ்

இத்துர்நடத்தைகளை தவிர்க்கின்ற முதலானதும் மற்றும் பிரதானமானதுமான நிறுவனம் இதுவாகும். இங்கு தொல்லை அல்லது துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியவர்களுக்காக “சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு” தாபிக்கப்பட்டுள்ளது. சிறுவர் மற்றும் மகளிருக்கு எதிராகச் செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், அவதானிப்புச் செய்தல் இவ்விதமான குற்றங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்றவைகள் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவரி: பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம்
வயிட்வேஸ் கட்டிடம்
இல:25, சேர் பாரேன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு -01
தொலைபேசி இல: 011-2444444

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தை தொடர்பாக அறிவிக்க வேண்டிய மற்றுமொரு நிறுவனம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையாகும்.

இல:330, தலவதுகொடவீதி, நுகேகொட.
தொலைபேசி: 011-2778911, 011-2778912, 011-2778915
மின்னஞ்சல்: info@childprotection.gov.lk
அவசர அழைப்புகளுக்கு: 1924

தொழில் திணைக்களம்

பராயமற்ற சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தல் பற்றிய செய்திகளை அறிவிக்க வேண்டிய நிறுவனம் தொழில் திணைக்களமாகும். கீழே குறிப்பிட்ட நிலையங்களுக்கு அறிவிக்க முடியும்.

உதவித் தொழில் ஆணையாளர்
மாவட்ட தொழில் அலுவலர்
சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர்
உபதொழில் அலுவலர்
தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம்
முகவரி: தொழில் ஆணையாளர்
சிறுவர் மற்றும் மகளிர் நடவடிக்கைப் பிரிவு
தொழில் திணைக்களம்
கொழும்பு-05
தொலைபேசி: 011-2587315, 011-2369297



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம்

சிறுவர்களின் பாதுகாப்பு, புனருத்தாபனம் தொடர்பாக இந்நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. 13 வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் இத்திணைக்களம் தனது சொந்த அதிகாரங்களை மாகாண சபை மட்டத்தில் பண்முகப்படுத்தி மாகாண ரீதியில் காரியாலயங்களை நிறுவியுள்ளது.

இதன் மூலம்

1. திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்ற இளைஞர் மற்றும் சிறு பராயத்த குற்றவாளிகளின் வாழ்க்கையை சீர்செய்து புனருத்தாபனம் செய்தல்.

2. பெற்றோருக்கு கீழ்ப்படியாத பாடசாலையிலிருந்து ஓடிச் செல்லும் முரண்டு சமூக விரோத வேலைகளைச் செய்யும் சிறுவர்களை நல்வழிக்கு கொண்டு வருதல்.

3. அநாதையான, கைவிடப்பட்ட, உதவியற்ற, குரூரமான செயல்களுக்கும் அனர்த்தங்களுக்கும் இரையாகிய சிறுவர்களைப் பாதுகாத்தல்.

பிரதான காரியாலயம்:

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களம்

இல 150A, எல்.எச். பீ கட்டிடம், நாவல வீதி,
நுகேகொட.
தொலைபேசி இலக்கம். 011- 2853549



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகள் ஆணைக்குழு

1996ம் ஆண்டின் 22ம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அமைப்பாகும். மனித உரிமைகளை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன இதன் பிரதான நோக்கமாகும். அதற்கிணங்க பிள்ளைகளின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அதனை மீறுவது தொடர்பான விசாரணைகளைச் செய்வதற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு பிரதான காரியாலயத்தின் முகவரி:

இல 42, ஸ்கல்டன் வீதி,
கொழும்பு 05.
தொலைபேசி இலக்கம்: 011- 2502703

## இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

இனம், மதம், சாதி, பால், தேசியம், பிறப்பிடம் எவ்வாறாயினும் சிறுவர்களின் மேலான அக்கறை தொடர்பான நிகழ்வுகளில் ஈடுபடுவது இலங்கை மக்களாகிய எமது எல்லோரினதும் கடமையாகும். அத்துடன் சிறுவர்களின் உரிமைகளை விருத்தி செய்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதும் எமது கடமையே. இவ்வாறு சிறுவர்களின் உரிமையை விருத்தி செய்வது தொடர்பாக சட்ட உதவி ஆணைக்குழுவானது பின்வருமாறு செயற்படுகின்றது.

1. ஐக்கிய நாடுகள் சபை சிறுவர்களின உரிமைப் பிரகடனத்தின் 42ம் உறுப்புரைக்கு இணங்க அவர்களது உரிமை தொடர்பாக வயது முதிர்ந்தோர் மற்றும் சிறுவர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பயனளிக்க கூடிய வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் ஏற்படும் பிள்ளைகளுக்கு எதிரான துர்நடத்தைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி சட்ட நடவடிக்கை எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சிறுவர்களுக்கு உள ரீதியான சிகிச்சை தேவைப்பட்டால் இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவானது உளரீதியான மருத்துவ முறை மற்றும் சட்டப்பிரிவினூடாக அவர்களை அச்சிகிச்சையைப் பெறுவதற்காக அனுப்புகின்றது.

4. சிறுவர்களின் நலன்களை மேம்படுத்தும் வழிவகைகள் தொடர்பாக ஆய்வொன்றை நடாத்தல், தற்போது பிள்ளைகளின் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை அரசுக்கு சுட்டிக்காட்டி புதிய சட்ட விடயங்களை மற்றும் அதனை கட்டியெழுப்புவதற்கான செற்பாடுகளில் அரசுக்கு உதவுதல்.

5. யுனிசெப் நிலையம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொலிஸ் போன்றவர்களின் உதவியுடன் சிறுவர்களின் உரிமையை விருத்தி செய்வதற்காகச் செயற்படல்.

6. சிறுவர்களின் அதியுயர்ந்த நலன், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை ஒழுங்குபடுத்துவதற்கென சிறுவர்களுக்காக மட்டும் வேறொரு நிலையம் பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் தாபிக்கப்பட்டுள்ளது. சிறுவர் தொடர்பான எந்தவொரு பிரச்சினையிலும் அது தொடர்பான கவனத்தைச் செலுத்தும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் மற்றும் எத்தரப்பினரும் அப்பிணக்குகளை நீதிமன்றத்திற்கு முன்வைக்க முடியும்.

அதன் முகவரி : கௌரவ நீதிபதி

சிறுவர் நீதவான் நீதிமன்றம்

டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை

கொஸ்வத்தை, பத்தரமுல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் தொடர்பான பிணக்குகளில் சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் தாபிக்கப்பட்டுள்ள சட்ட உதவி ஆணைக்குழுவின் நிலையத்தின் ஊடாக கட்டணம் எதுவும் அறவிடப்படாது அதற்கான தீர்வு மற்றும் சட்டத்தரணிகளின் உதவியும் பெற்றுக் கொடுக்கப்படும்.

சட்ட உதவி ஆணைக்குழுவின் பத்தரமுல்ல நிலையம்
சிறுவர் நீதவான் நீதிமன்றம்
டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை
கொஸ்வத்தை, பத்தரமுல்ல.

7. பாடசாலை மட்டத்தில் சட்டப்பிரிவை நிறுவுவதற்கான வழிகாட்டலின் போது நீங்கள் செய்ய வேண்டியது பாடசாலை அதிபரின் அனுமதியுடன் கூடிய கடிதமொன்றை அனுப்பி வைத்தலாகும். அவ்வேளையில் அது தொடர்பான உதவி ஒத்தாசைகள் எம்மால் வழங்கப்படுவதுடன் பல்வேறு வகையில் நிகழ்ச்சித் திட்டங்களும் இடம்பெறுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

முகவரி: இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு
சிறுவர் பிரிவு
பிரதான காரியாலயம்
இல 129, மேல் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி
புதுக்கடை
கொழும்பு 12.

தொலைபேசி இல: 011-2433618, 011-5335281
தொலைநகல்: 011-2395894
மின்னஞ்சல்: **legalaid@sltnet.lk**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தற்போது அமுலில் இருக்கும் சிறுவர் தொடர்பான அனைத்துச் சட்டங்கள்.

1978ம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம்

1833ம் ஆண்டின் 2ம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை

1995ம் ஆண்டின் 22ம் இலக்க தண்டனைச் சட்டக்கோவைத் (திருத்தச்) சட்டம்

1998ம் ஆண்டின் 29ம் இலக்க தண்டனைச் சட்டக்கோவைத் (திருத்தச்) சட்டம்

2006ம் ஆண்டின் 7ம் இலக்க தண்டனைச் சட்டக்கோவைத் (திருத்தச்) சட்டம்

1841ம் ஆண்டின் வீதியோரச் சிறுவர்களுக்கான (தெருச்சுற்றித் திரிபவர்கள்) கட்டளைச் சட்டம்

1889ம் ஆண்டின் 2ம் இலக்க குடியியல் நடவடிக்கைக் கோவைச் சட்டம் மற்றும் 1977ம் ஆண்டின் 19ம் இலக்க, 1971ம் ஆண்டின் 20ம் இலக்க, 1980 ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள்

1907ம் ஆண்டின் 05ம் இலக்க சிறைச்சாலைக் கட்டளைச் சட்டம்

1907ம் ஆண்டின் 19ம் இலக்க பொது விவாக கட்டளைச் சட்டம் மற்றும் 1995ம் ஆண்டின் 18ம் இலக்கத் (திருத்தச்) சட்டம்

1927ம் ஆண்டின் 4ம் இலக்க உண்மையற்ற வெளியீடுகள் தொடர்பான கட்டளைச் சட்டம்

1939ம் ஆண்டின் 28ம் இலக்க இளம் பராயத்த குற்றவாளிகளுக்கான (புனர்வாழ்வு, பாடசாலை) தொடர்பான கட்டளைச் சட்டம்

1939ம் ஆண்டின் 48ம் இலக்க பிள்ளைகள் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பான கட்டளைச் சட்டம்

1941ம் ஆண்டின் 22ம் இலக்க சிறுவர் இல்லங்கள் கட்டளைச் சட்டம்

1941ம் ஆண்டின் 24ம் இலக்க மகவேற்புச் சட்டம் மற்றும் 1979ம் ஆண்டின் 38ம் இலக்க (திருத்தச்) சட்டம்

1942ம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டம்

1944ம் ஆண்டின் 42ம் குற்றவாளிகளை நன்னடத்தை செய்வதற்கான சட்டம்

1948ம் ஆண்டின் 20ம் இலக்க குடிவரவு குடியகல்வுச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1951ம் ஆண்டின் 17ம் இலக்க பிறப்பு இறப்பு பதிவு செய்வதற்கான சட்டம்

1952ம் ஆண்டின் 44ம் இலக்க கண்டியத் திருமணம் மற்றும் விவாகரத்துக் சட்டம் மற்றும் 1995ம் ஆண்டின் 19ம் இலக்க (திருத்தச்) சட்டம்

1954ம் ஆண்டின் 19ம் இலக்க கடை காரியாலயங்கள் சட்டம்

1956ம் ஆண்டின் 47ம் இலக்க பெண்கள் மற்றும் பிள்ளைகள், இளைஞர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கான சட்டம் 1973ம் ஆண்டின் 29ம் இலக்க, 1984ம் ஆண்டின் 32ம் இலக்குத் (திருத்தச்) சட்டம்

1956ம் ஆண்டின் 48ம் இலக்க பெண்கள் மற்றும் பிள்ளைகள் இளம் பராயத்தவர்களுக்கு எதிரான (தகாத வெளியீடுகள்) சட்டம்

1975ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கைக் கோவை மற்றும் 1995ம் ஆண்டின் 20ம் இலக்க, 1998ம் ஆண்டின் 19ம் இலக்க, (திருத்தச்) சட்டங்கள்

1979ம் ஆண்டின் 41ம் இலக்க போதைப் பொருட்களுக்கு அடிமையான குற்றவாளிகள் தொடர்பான கட்டளை

1998ம் ஆண்டின் 50ம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்

1999ம் ஆண்டின் 27ம் இலக்க நீதிமன்ற ஒழுங்கமைப்புச் சட்டம்

1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டம்

1999ம் ஆண்டின் 32ம் இலக்க சான்றுகள் கட்டளை (திருத்தச்) சட்டம்

2005ம் ஆண்டின் 16ம் இலக்க சுனாமிச் சட்டம்

2006ம் ஆண்டின் 27ம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான சட்டம்

2006ம் ஆண்டின் 24ம் இலக்க பெண்கள் மற்றும் பிள்ளைகள் இளம் ஆட்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு எதிரான (திருத்தச்) சட்டம்

2007ம் ஆண்டின் 57ம் இலக்க குடியியல் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டஉதவி ஆணைக்குழுவின் பிராந்திய நிலையங்களின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள்

| நிலையங்கள் | | முகவரி |
|---|---|---|
| 1. | தலைமை அலுவலகம் | மேல்நீதிமன்ற கட்டிடத்தொகுதி,புதுக்கடை,கொழும்பு12 011-2433618, 011-5835329 |
| 2. | கொழும்பு நிலையம் | 211,உயர்நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,புதுக்கடை, கொழும்பு12, 011-3137153 |
| 3. | வெலிக்கடை சிறைச்சாலை | வெலிக்கடை சிறைச்சாலை வெலிக்கடை, 011-5335329 |
| 4. | அனுராதபுரம் | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, அனுராதபுரம். 025-2224465 |
| 5. | கண்டி | புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கண்டி. 081-2388978 |
| 6. | காலி | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கோட்டை, காலி. 091-2226124. |
| 7. | ஹம்பந்தோட்டை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, திஸ்ஸ வீதி, ஹம்பந்தோட்டை 047-2221092. |
| 8. | நுவரெலியா | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி.நுவரெலியா. 052-2221092 |
| 9. | மொனராகலை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி.மொனராகலை. 055-2276891. |
| 10. | அம்பாறை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி அம்பாறை. 063-2223496. |
| 11. | கேகாலை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி கேகாலை. 035-2231790. |
| 12. | சிலாபம் | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி சிலாபம் 032-2222175 |
| 13. | அக்கரைப்பற்று | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி அக்கரைப்பற்று 067-5675333 |
| 14. | பலபிட்டி | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி பலபிட்டி. 091-2255753. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 15. | மாத்தறை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>மாத்தறை 041-2233815 |
| 16. | வவுனியா | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>வவுனியா 024-2221863. |
| 17. | திருகோணமலை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>திருகோணமலை 026-5676023 |
| 18. | கல்முனை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>கல்முனை 067-2223710 |
| 19. | யாழ்ப்பாணம் | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>யாழ்ப்பாணம் 021-2224444 / 0777-735910 |
| 20. | மட்டக்களப்பு | முதலாவது மாடி,<br>நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>மட்டக்களப்பு 065-2226359 |
| 21. | பண்டாரவளை | 15, வெலிமட வீதி, பண்டாரவளை<br>057-2224733 |
| 22. | மாத்தளை | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>மாத்தளை 045-2226899 |
| 23. | அவிசாவளை | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>அவிசாவளை 036-3362219 |
| 24. | இரத்தினபுரி | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>இரத்தினபுரி 045-2226899 |
| 25. | நீர்கொழும்பு | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>நீர்கொழும்பு 031-5677111 |
| 26. | களுத்தறை | மேல் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>களுத்தறை 034-5628860 |
| 27. | கம்பஹா | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>கம்பஹா 033-5677998 |
| 28. | பொலன்னறுவை | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>பொலன்னறுவை 027-2226572 |
| 29. | பாணந்துறை | மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>பாணந்துறை 038-2244822 |
| 30. | குளியாப்பிட்டி | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>குளியாப்பிட்டி 037-2284611 |
| 31. | குருநாகல் | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>குருநாகல் 037-2229641 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 32. | மகியங்கனை | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>பதுளை வீதி, மகியங்கனை<br>055-2258332 |
| 33. | மாஹோ | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>மாஹோ 037-22750575 |
| 34. | ஹொரணை | புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>ஹொரணை 034-2265244 |
| 35. | மத்துகம | புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>மத்துகம 034-3444262 |
| 36. | அத்தனகலை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>மல்வத்தை, நிட்டம்புவ. 033-2297020 |
| 37. | தெனியாய | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>மொரவக்க, கல்தொல.<br>கொடபொல. 041-3428006 |
| 38. | தம்புள்ளை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>தம்புள்ளை 066-3682238 |
| 39. | மாவனல்லை | 71/5J, 1/1,ஹய்வே கட்டிடத்தொகுதி<br>கண்டி வீதி, மாவனல்லை.<br>035-2247272 |
| 40. | மாறவில | மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>மாறவில 032-2254443. |
| 41. | வறக்காப்பொல | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>துல்ஹிரிய, அலவ்வ. 037-2277075 |
| 42. | சிறுவர் நீதிமன்றம் | சிறுவர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை,<br>பொஸ்வத்தை, பத்தரமுல்ல. |
| 43. | நுகேகொடை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>கங்கொடவில, நுகேகொட.<br>011-2809068 |
| 44. | வெலிமடை | 33, பொரலந்த வீதி, வெலிமடை<br>057-2244860. |
| 45. | கந்தளாய் | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>கந்தளாய் 026-3263091 |
| 46. | தம்புத்தேகம | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>தம்புத்தேகம 025-2224465 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 47. | கல்கிசை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>கல்கிசை 011-2718708 |
| 48. | திஸ்ஸமகாராம | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>திஸ்ஸமகாராம 047-2239611 |
| 49. | பத்தேகம | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>பத்தேகம. |
| 50. | வெள்ளவாய | மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>வெள்ளவாய 071-5306115. |
| 51. | வலஸ்முல்ல | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>வலஸ்முல்ல 072-4396114 |
| 52. | நாவலப்பிட்டி | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>நாவலப்பிட்டி 071-6606811 |
| 53. | அம்பிலிபிட்டி | நீதிமன்றக் கட்டிடத்தொகுதி<br>அம்பிலிபிட்டி 077-1548825 |
| 54. | ஹட்டன் | 204D, கொழும்பு வீதி,<br>பெட்ஹில், ஹட்டன் 051-2225238 |
| 55. | ஹிங்குராங்கொடை | 278, நுவரவத்த, ஹிங்குராங்கொடை<br>027-3278885 |
| 56. | பதுளை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>பதுளை |
| 57. | மன்னார் | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>மன்னார். |
| 58. | கடுவளை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>கடுவளை 011-2548150. |
| 59. | முல்லைத்தீவு | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>முல்லைத்தீவு. |
| 60. | கிளிநொச்சி | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>கிளிநொச்சி. |
| 61. | மூதுார் | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>மூதுார் |
| 62. | வாழைச்சேனை | நீதிமன்றக் கட்டிடத் தொகுதி<br>வாழைச்சேனை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு**
**இல: 129, மேல் நீதிமன்ற கட்டிடத்தொகுதி**
**கொழும்பு – 12.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org